**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**STC. No. 21 /2021 PW.1**

| | |
|---|---|
| பெயர் : பெர்னாட்ஷா | தந்தை/கணவர் பெயர்: அய்யாகண்ணு |
| ஊர் : | தாலுகா : |
| வயது : | தொழில் : |
| ஜாதி : | சமயம் : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.07.2026

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**02.07.2026 முதல் விசாரணை:**

1. நான் தற்போது அய்யாப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எதிரியைத் தெரியும். எனக்கு பழக்கமானவர். கடந்த 23.05.2020 ம் தேதி மாலை 05.00-5.30 மணியளவில் நான் வேலம்மாள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்வதற்காக எனது இருசக்கர வண்டியில் மெயின் ரோட்டில் நான் சென்ற போது எதிரி ராஜா சக்தி பெட்டி கடை அருகே உள்ள பாலத்தில் அமர்ந்திருந்தார்.

2. அவரை பார்த்தவுடன் வாங்க மாப்பிள்ளை என சொல்லிவிட்டு எனது வாகனத்தை நிறுத்தினேன். அவர் திடீரென்று எழுந்து வந்து என்னை கன்னத்தில் ஓங்கி அறைந்து , என்னை பார்த்து டேய் நாயக்க பயலே , தேவுடியா மகனே, சுன்னி மகனே என அசிங்கமாக பேசியதால் நான் நிலைகுலைந்து நிற்கும் போது அருகே இருந்த தென்னை மட்டையை எடுத்து என்னை மாறிமாறி அடித்தார். முதலில் என்னை அடித்த போது எனது கையால் தடுத்தேன். திரும்பியபோது எனது முதுகில் அடித்தார். ஏன் மாப்பிள்ளை அடிக்கிறீர்கள் என்று நான் கெஞ்சினேன். உன்னை கொல்லாமல் விட மாட்டேன் டா என மீண்டும் அடித்தார்.

3. நான் நிலைகுலைந்து கீழே விழுந்து விட்டேன். அருகே நின்று பார்த்து கொண்டிருந்த நபர்களில் சங்கர், சக்திவேல் ஓடி வந்து என்னை விட்டுவிடுமாறு கூறினார்கள். நான் மயங்கிய நிலையில் கீழே சாய்ந்துவிட்டேன். சக்திவேல் உதவியுடன் நான் இரு சக்கர வாகனத்தை

எடுத்துக்கொண்டு காருக்கு சென்ற அதன் பின்னர் வேலம்மாள் மருத்துவமனைக்கு சென்று விட்டேன். நான் வேலம்மாள் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பு காவல் நிலையம் சென்று நடந்த சம்பவம் குறித்து கைப்பட எழுதி புகார் கொடுத்தேன். அந்த புகார் என்னிடம் காட்டப்படுவது தான். ( **அந்த புகார் மனு அ.த.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. நான் பொது நல காரியங்களில் ஈடுபடுவேன். மேற்படி சம்பவத்திற்கு 1 வாரம் முன்பு எனது கிராமத்தில் உள்ள டிரான்ஸ்பாமர் பழுதுதடைந்து விட்டது. அதனை ஊராட்சி அலுவலக கிளார்க் ஜெயக்குமார் மின்சார வாரிய ஊழியர்களை வைத்து சரி செய்தார். மறுநாள் மேற்படி விவரங்களை எனது முகநூல் பக்கத்தில் மேற்படி ஜெயக்குமாரை பாராட்டி பதிவாக போட்டிருந்தேன். அன்றைய தினம் எதிரி என்னை தொடர்பு கொண்டு மேற்படி பதிவை குறித்து என்னிடம் பேசினார். எதிரி என்னிடம் நான் ஊராட்சி மன்ற தலைவராக இருக்கும் போது வேறொருவரை பாராட்டி பதிவு போட்டது தப்பு என்று கூறினார். எனவே மேற்படி பதிவை நான் டெலிட் செய்து விட்டேன். அதனை மனதில் வைத்துக்கொண்டு என்னை சம்பவத்தன்று எதிரி முகநூலில் பதிவு போடுகிறாயே நீ என்ன பெரிய மனுசனா என்று சத்தம் போட்டார். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

5. சம்பவத்திற்கு பின்னர் சம்பவம் தொடர்பாக 5 நாட்களுக்கு பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 23.05.2020 ம் தேதி மாலை 6.00-6.15 மணியளவில் எஸ். எஸ். கோட்டை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். மேற்படி புகாரை சார்பு ஆய்வாளர் சையது அலியிடம் கொடுத்தேன். புகார் கொடுத்த பிறகு மருத்துவமனைக்கு செல்வதற்கு மருத்துவ நமுனா கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை மருத்துவமனைக்கு போக சொன்னார். புகார் கொடுத்து பிறகு 3-4 நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

6. புகார் மனுவிலும், போலீஸ்சார் விசாரணையிலும் சங்கர், சக்திவேல் ஆகியோர் என்னை எதிரி அடிக்க விடாமல் தடுத்தார்கள் என்றும், நான் மயங்கிய நிலையில் கீழே சாய்ந்து விட்டேன் என்ற விவரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். புகாரிலும், போலிஸ்சார் விசாரணையிலும் நான் எந்த திசையிலிருந்து எந்த திசைக்கு வந்த போது சம்பவம் நடந்தது என்று

சொல்லியுள்ளேனா என்றால் வீட்டில் இருந்து வரும் போது என்று சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை சுற்றி கடைகள் உள்ளதா என்றால் 3 கடைகள் உள்ளது. அந்த இடம் ஆள்நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான்.

7. சம்பவத்தை 10-15 நபர்கள் பார்த்தார்கள். அய்யாப்பட்டி கிழமேல் மண்ரோட்டில் பாலம் உள்ளது என்றால் சரிதான். பாலம் அருகே சம்பவம் நடந்தது என்றால் சரிதான். சக்திவேல், சங்கர் சத்தம் கேட்டு சம்பவஇடத்திற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை பார்த்து கொண்டிருந்தார்கள். சக்திக்கடை என்பது டீக்கடை மற்றும் பெட்டிகடை ஆகும். புகார் மனுவை நான் தான் எழுதினேன். நான் 15 நிமிடத்தில் மயக்கநிலையில் இருந்து தெளிவு நிலைக்கு வந்தேன். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் சிகிச்சை பெற்றேனா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் எனக்கும், எதிரிக்கும் தேர்தல் முன்விரோம் இருந்தது என்றால் சரியல்ல.

8. நான் எந்த அரசு மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொள்ளவில்லை. சம்பவத்தில் வலது கை வீக்கம் ஏற்பட்டது என்று சொல்லியுள்ள நிலையில் புகாரை எழுதிக்கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனம் தான் ஓட்ட முடியவில்லை. புகாரை எழுதிக்கொடுத்தேன். நான் வேலம்மாள் மருத்துவமனைக்கு 23 ம் தேதி சென்றேன். வெளிநோயாளியாக சிகிச்சை பார்த்து திரும்பி வந்து விட்டேன். என்னை எதிரி தென்னை மட்டையால் காயம் ஏற்படுத்திருந்தால் நான் அதற்கு சிகிச்சை பெற்றிருப்பேன் என்றாலும், சம்பவத்தில் எனக்கு எந்த காயமும் ஏற்படவிடல்லை என்பதால் தான் எனது நோயிக்கு மட்டும் சிகிச்சை பார்த்தேன் என்றால் சரியல்ல.

9. எனது காயத்தை விட நோய் பெரியதாக இருந்தால் அதற்கு சிகிச்சைக்கு சென்றேன். உண்மையிலேயே எதிரி என்னை மட்டையால் தாக்கி காயம் ஏற்படுத்திருந்தால் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வேலம்மாள் மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்றாலும் எதிரி பழிவாங்குவதற்காக பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன நாள், நேரம், இடத்தில் எந்த சம்பவம் நடக்கவில்லை என்றால் எதிரி என்னை தாக்கவில்லை என்றாலும் இரு சக்கர வாகனத்தில் சென்ற போது நிலைதடுமாறி

விழுந்து ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் தினத்தன்றே நான் புகார் கொடுத்திருந்தால் உண்மையான

சம்பவம் என்றால் அன்றைய தினமே புகார் பதிவு செய்திருக்கும் என்றால் சரியல்ல. எனது செல்வாக்கை பயன்படுத்தி வழக்கு பதிவு செய்ய அழுத்தம் கொடுத்தால் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**STC. No. 21 /2021 PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயசங்கர் | தந்தை/கணவர் பெயர் | : காயாம்பு |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.07.2026

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**<u>02.07.2026 முதல் விசாரணை</u>:**

1. நான் தற்போது அய்யாப்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்கிறேன். அ.சா.1 யைத் தெரியும். எதிரியைத் தெரியும். எனது ஊரைச் சேர்ந்தவர்கள். கடந்த 23.05.2020 ம் தேதி மாலை 05.00 மணிக்குமேல் எங்கள் ஊர் நாலு ரோட்டில் உள்ள சக்தி என்பவரது கடையில் நானும், மாணிக்கமும் இருந்த போது அ.சா.1 அவரது வீட்டின் பக்கத்தில் இருந்து நாலு ரோட்டில் ஏறுவதற்காக இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார்.

2. எதிரி ராஜா படியான் கோவில் செல்லும் ரோட்டில் உள்ள பாலத்தில் அமர்ந்திருந்தார். அ.சா1 யை பார்த்து எதிரி நில்லுடா என்று கூறினார். அ.சா1 வாகனத்தை நிறுத்தி என்ன மாப்பிள்ளை என்று கேட்டார். அப்போது ராஜா, பெர்னாட்ஷா வை கன்னத்தில் அறைந்து வண்டியை பிடித்து தள்ளியதில் பெர்னாட்ஷா கீழே விழுந்து விட்டார். அருகே இருந்த தென்னை மட்டையை வைத்து ராஜா, அ.சா.1 யை முதுகிலும், கையிலும் அடித்தார்.

3. அசிங்கமான வார்த்தைகளால் திட்டி , நாயக்க பயலே உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கூறி அ.சா1 யின் தலையில் அடிக்க போனார். அ.சா.1 கையை வைத்து தடுத்து விட்டார். நான், சக்திவேல், மாணிக்கம் ஆகியோர் சென்று எதிரியை தடுத்து விலக்கினோம். அ.சா1 யின் கை வீங்கியிருந்தது. எனவே சக்திவேல் மேற்படி இருசக்கர வாகனத்தில் அ.சா.1 யை

அழைத்து சென்றார். எதிரியும் அங்கிருந்து சென்று விட்டார். பின்னர் விசாரித்த போது அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு சென்றதாக கூறினார். போலீசார் என்னை ஊரில் வைத்து விசாரித்தார்கள். காவல் நிலையம் வருமாறு அறிவுறுத்தினார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

4. சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலீசார் விசாரித்தார்கள் என்றால் ஊரில் மறுநாள் விசாரித்தார்கள். பின்னர் 1 வாரம் கழித்து காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். எனது வாக்குமூலத்தை டைப் செய்து , படித்து காண்பித்து கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் கு.வி.மு.ச 161(3) வாக்குமூலத்தில் எனது கையொப்பம் இல்லை. நானும், எதிரியும் பேசி கொள்வது இல்லை என்றாலும், இருதரப்பினாராக இருக்கிறோம் என்றால் சரிதான். ஆனால் நான் எதிரியுடன் நல்லமுறையில் பேசி கொள்வேன்.

5. அ.சா 1 எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி வந்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தார். அவ்வாறு வரும் போது மேற்கில் உள்ள பாலம் அருகே சம்பவம் என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் பாலத்திலிருந்து 3-4 அடி தொலைவில் கடைகள் உள்ளது. பாலத்திற்கும், பெட்டி கடைக்கும் இடையே முறையூர் செல்லும் தென்வடல் நெடுஞ்சாலை உள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் நான் சம்பவம் இடத்தில் இருந்திருந்தால் சம்பவ இடம் குறித்து தெளிவாக சாட்சியம் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல.

6. எதிரிக்கும், அ.சா.1 க்கும் சண்டை நடக்கும்போது எவ்வளவு நேரம் கழித்து வந்தேன் என்றால் சண்டை நடப்பதற்கே முன்பே நான் கடையில் இருந்தேன். 10-15 நிமிடம் கழித்து சண்டையை விலக்கிவிட வந்தேன். சம்பவ இடத்தில் 10-15 நபர்கள் இருந்தார்கள். எதிரி பயன்படுத்திய தென்னைமட்டையை போலீசார் கைப்பற்றினாக்களா என்றால் தெரியவில்லை. நான் வீட்டில் இருக்கும் போது வீட்டில் வைத்து விசாரித்தார்கள்.

7. எனது வீடு சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து கால் பரலான் தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் அ.சா.1 யுடன் மருத்துவமனைக்கு உடன் செல்லவில்லை. எத்தனை மணிக்கு புகார் கொடுத்தார்கள். யார் மீது கொடுத்தார்கள்

என்றால் மணி தெரியாது. எதிரி மீது புகார் கொடுத்தார். நான் சொல்வது போல் எதிரி, அ.சா.1 யை அசிங்கமாக பேசி அடித்து  தாக்கவில்லை என்றாலும் எதிரி மீது உள்ள முன்பகை காரணமாக அ.சா.1 க்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு எந்த காயமும் கிடையாது என்றாலும், அ.சா.1 க்கு உள்ள இருதய நோய்க்கு சிகிச்சை பெறுவதற்கு மருத்துவமனை சென்றார் என்றால் சரியல்ல.  எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**STC. No. 21 /2021 PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சக்திவேல் | தந்தை/கணவர் பெயர் | : ராமசாமி |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.07.2026

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**02.07.2026 முதல் விசாரணை:**

1. நான் தற்போது அய்யாப்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 , 2 யைத் தெரியும். எதிரியைத் தெரியும். எனது ஊரைச் சேர்ந்தவர்கள். அ.சா.1 எனக்கு உறவினர். அ.சா.2 என்னுடன் படித்தவர். கடந்த 23.05.2020 ம் தேதி மாலை 05.00 மணியளவில் எங்கள் ஊர் மெயின் ரோட்டில் உள்ள சக்தி என்பவரது பெட்டிக்கடையில் நான், ஜெயசங்கர், மாணிக்கம் ஆகியோர் இருந்தோம். அ.சா1 ஊருக்குள் இருந்து இரு சக்கர வாகனத்தில் மெயின் ரோட்டிற்கு வந்தார். நாங்கள் இருந்த கடையின் அருகே உள்ள பாலத்தில் எதிரி இருந்தார்.

2. எதிரி ராஜா அ.சா.1 யை வாங்கள் என்று அழைத்தார்.அ.சா.1, ராஜாவின் அருகே சென்று என்ன மாப்பிள்ளை என்று கேட்டார். எதிரி, அசா.1 அருகே வந்தவுடன் அவரை என்னடா தேவுடியா மகனே என சொல்லி கன்னத்தில் அறைந்தார். இரு சக்கர வாகனத்துடன் அ.சா.1 யை எதிரி மிதித்து கீழே தள்ளிவிட்டு ஏன்டா பேஸ்புக்கில் கிளர்க் பெயரை போடுற என் பெயரை போட மாட்டியா, உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மீண்டும் அசிங்கமாக பேசினார் .

3. அருகே இருந்த தென்னை மட்டையை எடுத்து எதிரி அ.சா.1 யைத் முதுகில் அடித்தார். மீண்டும் அடித்த போது கையால் தடுத்தார். ரொம்ப அடித்தவுடன் அ.சா.1 வலியில் கத்தினார். பிரச்சனை பெரியதாகி விட்டது என்று நான், ஜெயசங்கர், மாணிக்கம் ஆகியோர் சென்று

சண்டையை விலக்கிவிட்டோம். ராஜாவை இவ்வாறு செய்கிறீர்கள் உங்களை போலீஸில் ஒப்படைக்க வேண்டும் என்று நான் கேட்டுகொண்டேன். என்னை உதறிவிட்டு ராஜா ஓடிவிட்டார். அ.சா1 யை இரு சக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு அழைத்தேன். அவர் கார் அமர்த்துமாறு கூறினார். எனவே காரில் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் புகார் கொடுக்கவேண்டுமென்று சொன்னதால் எஸ்.எஸ் கோட்டை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு அதன்பின்னர் மதுரை வேலம்மாள் மருத்துவமனைக்கு சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

4. போலீசார் என்னை மறுநாள் எங்கள் வீட்டில் வைத்து விசாரித்தார். போலீஸ் விசாரணையில் நான் வேலம்மாள் மருத்துவமனைக்கு அ.சா.1 யை அழைத்து சென்றாதாகவும், அவ்வாறு செல்லும் வழியில் அ.சா.1 புகார் கொடுக்க சென்ற போது நான் உடன் இருந்ததாகவும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அ.சா.1 எனக்கு சித்தப்பா முறை ஆகும். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் காலம்கொரோனா காலம என்றாலும், ஊரடங்கு உத்தரவு பிறக்கப்பட்டிருந்தது என்றாலும் சரியல்ல. பிறப்பிக்கப்பட்டு இருந்தது.

5. நான் எஸ். எஸ். கோட்டையில் ஆட்டோ ஓட்டிகிறேன். சம்பவம் இடம் முறையூர் செல்லும்தென்வடல் தார் ரோடு என்றால் சரிதான். எதிா பாலத்தில் உட்கார்ந்து கொண்டு அ.சா.1 யை அழைத்து அவர் வந்தவுடன் அவரை அசிங்கமாக பேசி அறைந்தாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் தென்வடல் ரோட்டில் மேற்குபுறம் பாதை உள்ளதா என்றால் இல்லை. ஊருக்கு இருபுறமும் பாதை உள்ளது என்றால் நாலு ரோட்டில் இருந்து கிழக்கு தார்ரோட்டில் ஊருக்கு செல்லும் வழியில் பிரச்சனை நடந்தது.

6. நான் சொல்வது போல் எதிரி, அ.சா.1 யை அசிங்கமாக பேசி அடித்து தாக்கவில்லை என்றாலும் எதிரி மீது உள்ள முன்பகை காரணமாக அ.சா.1 எனது சித்தப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு எந்த காயமும் கிடையாது என்றாலும், அ.சா.1 க்கு உள்ள இருதய நோய்க்கு சிகிச்சை பெறுவதற்கு மருத்துவமனை சென்றார் என்றால் சரியல்ல.

எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் நான் சம்பவத்தை நேரடியாக பார்த்திருந்தால் சம்பவம் இடம் குறித்து சரியாக சாட்சியம் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல.